மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்

முன்னிலை:- திருமதி.N.ரேணுகா., பி.ஏ., பி.எல்

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்

2024 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 12 ம் நாள் வியாழக்கிழமை

இடை மனு எண்.4/2024

அசல் வழக்கு எண்.192/2017

1. மருதகுட்டி, த/பெ.அய்யாக்கவுண்டர், இந்து, வயது 60 வருடங்கள், வசிப்பிடம் கதவு எண்.1/155, மேற்கு வீதி, நீலாம்பூர், கோவை - 641062.

...மனுதாரர் / வாதி

//எதிர்//

1. கா.சின்னகுட்டி (இறப்பு)

2. செல்லம்மாள், க/பெ.(லேட்).கா.சின்னகுட்டி, இந்து, வசிப்பிடம் கதவு எண்.1/154, மேற்கு வீதி, நீலம்பூர், கோவை - 641014.

3. மனோஜ், த/பெ.(லேட்).கா.சின்னகுட்டி, இந்து, வசிப்பிடம் கதவு எண்.1/154, மேற்கு வீதி, நீலம்பூர், கோவை - 641014.

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

மனுவில் உள்ள திருத்த விபரத்தில் குறிப்பிடப்பட்ட திருத்தங்களை அசல் வழக்குரையில் திருத்தம் செய்ய கோரி கட்டளை 6 விதி 17 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான நாள் : 20.08.2024

இந்த மனு 11.09.2024 அன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.முத்துக்குமார், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.கோபாலகிருஷ்ணன், அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>இறுதிஆணை</u>

1. மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2. செலவுத் தொகை இல்லை.

<u>செலவு தொகை பட்டியல்</u>

//இல்லை//

(செலவு தொகைப் பட்டியல் இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை)

<u>திருத்த விபரங்கள்</u>

1. வழகுரை பக்கம் 3-ல் பத்தி 10-ல் முதல் வரியில் மனுச்சொத்தில் என்ற வார்த்தைக்குப்பிறகு "அட்டவணை II-ல் நான் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த காலகட்டத்தைப் பயன்படுத்தி" என்று சேர்க்கப்பட வேண்டும்.

2. வழக்குரை பக்கம் 4-ல் பத்தி 12-ற்கு பிறகு 12 A என புதிய பத்தி உருவாக்கப்படவேண்டும். அதில் மேற்படி 12 A-ல் "வழக்கிடைச் சொத்தில் பிரதிவாதிகள் அயிட்டம் I-ல் தென்வடல் 24 முழம், கிழமேல் 23 முழம் உள்ள இடத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். மேற்படி ஆக்கிரமிப்பினை பிரதிவாதிகள் அகற்ற வேண்டும் என செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டியும் வாதிகள் இவ்வழக்கினைத் தாக்கல் செய்கிறார்கள்."

3. வழக்குரை பக்கம் 5-ல் பத்தி VI-ன் முடிவிலும், Details of Valuation என்ற பகுதிக்கு மேல் பகுதியிலும் மேலும் "செயலுறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காக தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள் சட்டம் பிரிவு 27 (C)-ன் படி ரூ.1000/-ற்கு நீதிமன்ற முத்திரைக் கட்டணமாக ரூ.30.50 செலுத்தப்பட்டுள்ளது" என்று சேர்க்கப்பட வேண்டும்.

4. மேலும் வழக்குரை பக்கம் 5-ல் Details of Valuation கடைசியில் என்ற பகுதியில் "4-ம் பரிகார மதிப்பு

| | |
|---|---|
| TNCF Act Section 27 (C)- ன் படி | ரூ.1000.00 |
| அதற்கான முத்திரைக் கட்டணம் | ரூ.30.00" |

என்று சேர்க்கப்பட வேண்டும்.

5. மேலும் மேற்படி பத்தியில் "ஆக மொத்தம்" என ஏற்கனவே உள்ள பகுதி நீக்கம் செய்யப்பட்டு புதியதாக "ஆக மொத்தம் என புதியதாக சேர்க்கப்பட்டு

மதிப்பிற்கான முதல் பகுதியில் முத்திரைக் கட்டணத்திற்கான 2-ம் பகுதியில் ரூ.240/- என்றும் பதிவு செய்யப்பட வேண்டும்".

6. மேலும் வழக்குரை பக்கம் 6-ல் பரிகாரம் கோரும் பகுதியில் ஏற்கனவே உள்ள பத்தி எண்.5 என்பதற்கு பதிலாக புதியதாக ஒரு பத்தி "5 எனத் துவங்கி வழக்கிடைச் சொத்தில் அயிட்டம் II-ல் பிரதிவாதிகளால் செய்யப்பட்டுள்ள ஆக்ரமிப்பு கட்டுமானத்தை அகற்ற வேண்டும் என ஓர் செயலுறுத்துக் கட்டளை வழங்க வேண்டுமாய் பிராத்திக்கிறார்கள்" என்று சேர்க்கப்பட வேண்டும்.

7. மேலும் ஏற்கனவே இருந்த பத்தி எண்.5 ஆனது "6" ஆக மாற்றப்பட வேண்டும்."

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12 ம் நாள் எனது கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

Sd/N.Renuga

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சூலூர்.

Final Order
IA.No.4/2024 in
OS.192/2017 in
Dated:12.09.2024
DMC, Sulur.